# டிசம்பர் – 19 – செவ்வாய்

## புனித ஹெமிசியஸ்

**என் கடவுளே, பொல்லார் கையினின்று என்னைக் காத்தருளும்: திபா. 71:4**

## முதல் வாசகம் : நீதிபதிகள் 13 : 2 – 7, 24 - 25

நல்லோர் தம் சொற்களின் பலனான நல்லுணவை உண்கிறார் வஞ்சகச் செயல்களே வஞ்சகர் உண்ணும் உணவு. நாவைக் காப்பவர் தம் உயிரையே காத்துக் கொள்கிறார் நாவைக் காவாதவன் கெட்டழிவான். சோம்பேறிகள் உண்ண விரும்பு கிறார்கள், உணவோ இல்லை. ஊக்கமுள்ளவரோ உண்டு கொழுக்கிறார். நல்லார் பொய்யுரையை வெறுப்பர். பொல்லாரோ வெட்கக்கேடாகவும் இழிவாகவும் நடந்துகொள்வர். நேர்மையாக நடப்போரை நீதி பாதுகாக்கும் பொல்லாரை அவர்களின் பாவம் கீழே வீழ்த்தும். ஒன்றுமில்லாதிருந்தும் செல்வர் போல நடிப்போரு முண்டு மிகுந்த செல்வமிருந்தும் ஏழைகள் போல நடிப்போருமுண்டு. பிரம்பைக் கையாளதவர் தம் மகனை நேசிக்காதவர். மகனை நேசிப்பவரோ அவனைத் தண்டிக்கத் தயங்கமாட்டார். கடவுளுக்கு அஞ்சி நடப்போருக்கு வயிறார உணவு கிடைக்கும் பொல்லாரின் வயிறோ பசியால் வாடும்.

**பதில்பாடல் :** நாளெல்லாம் நான் பேசுவது உமது பெருமையே

## நற்செய்தி: லூக்கா 1 : 5 - 25

யூதேய நாட்டில் ஏரோது அரசனாக இருந்த காலத்தில், அபியா வகுப்பைச் சேர்ந்த செக்கரியா என்னும் பெயர்கொண்ட குரு ஒருவர் இருந்தார். அவர் மனைவி ஆரோனின் வழிவந்தவர் அவர் பெயர் எலிசபெத்து. அவர்கள் இருவரும் கடவுள் பார்வையில் நேர்மையானவர்களாய் விளங்கினார்கள். ஆண்டவருடைய அனைத்துக் கட்டளைகளுக்கும் ஒழுங்குகளுக்கும் ஏற்பக் குற்ற மற்றவர்களாய் நடந்து வந்தார்கள். அவர்களுக்குப் பிள்ளை இல்லை ஏனெனில், எலிசபெத்து கருவுற இயலாதவராய் இருந்தார். மேலும் அவர்கள் வயது முதிர்ந்தவர்களாயும் இருந்தார்கள். தம்முடைய பிரிவின்முறை வந்தபோது, செக்கரியா கடவுளின் திருமுன் குருத்துவப் பணி ஆற்றிவந்தார். குருத்துவப் பணி மரபுக்கு ஏற்ப, ஆண்டவரின் திருக்கோவிலுக்குள் சென்று தூபம் காட்டுவது யாரென்று அறியச் சீட்டுக் குலுக்கிப் போட்டபோது அது செக்கரியா பெயருக்கு விழுந்தது. அவர் தூபம் காட்டுகிற வேளையில் மக்கள் கூட்டத்தினர் அனைவரும் வெளியே இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்தனர். அப்பொழுது ஆண்டவ ருடைய தூதர் ஒருவர் தூப பீடத்தின் வலப்பக்கத்தில் நின்றவாறு அவருக்குத் தோன்றினார். அவரைக்கண்டு செக்கரியா அச்சமுற்றுக் கலங்கினார். வானதூதர் அவரை நோக்கி, ”செக்கரியா, அஞ்சாதீர், உமது மன்றாட்டு கேட்கப்பட்டது. உம்மனைவி எலிசபெத்து உமக்கு ஒருமகனைப் பெற்றெடுப்பார் அவருக்கு யோவான் எனப் பெயரிடுவீர். நீர் மகிழ்ந்து பேருவகை கொள்வீர். அவரது பிறப்பால் பலரும் மகிழ்ச்சியடைவர். அவர் ஆண்டவர் பார்வையில் பெரியவராய் இருப்பார் திராட்சை மதுவோ வேறு எந்த மதுவோ அருந்த மாட்டார் தாய் வயிற்றில் இருக்கும்போதே தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்படுவார். அவர், இஸ்ரயேல் மக்களுள் பலரைத் தம் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வரச் செய்வார். எலியாவின் உளப்பாங்கையும் வல்லமையையும் உடையவராய் அவருக்கு முன்செல்வார் தந்தையரும் மக்களும் உளம் ஒத்துப்போகச் செய்வார் நேர்மையாளர்களின் மனநிலையைக் கீழ்ப்படியாதவர்கள் பெறச் செய்வார் இவ்வாறு ஆண்டவருக்கு ஏற்புடைய ஒரு மக்களினத்தை ஆயத்தம் செய்வார்” என்றார். செக்கரியா வானதூதரிடம், ”இது நடைபெறும் என எனக்கு எப்படித் தெரியும்? நான் வயதானவன். அதுபோல் என் மனைவியும் வயது முதிர்ந்தவராயிற்றே” என்றார். அதற்கு வானதூதர் அவரிடம், ”நான் கபிரியேல் கடவுளின் திருமுன் நிற்பவன் உம்மோடு பேசவும் இந்த நற்செய்தியை உமக்கு அறிவிக்கவும் அனுப்பப்பட்டேன். இதோபாரும், உரியகாலத்தில் நிறைவேற இருக்கும் என்னுடைய வார்த்தைகளை நீர் நம்பவில்லை. ஆதலால் அவை நிறைவேறும் வரை நீர் பேச்சற்றவராய் இருப்பீர் உம்மால் பேசவே இயலாது” என்றார். மக்கள் செக்கரியாவுக்காகக் காத்திருந்தனர். திருக்கோவிலில் அவர் காலந்தாழ்த்துவதைக் குறித்து அவர்கள் வியப்படைந்தார்கள். அவர் வெளியே வந்தபோது அவர்களிடம் பேச முடியாமல் இருந்தார். ஆதலால் அவர் திருக்கோவிலில் ஏதோ காட்சி கண்டிருக்க வேண்டும் என அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். அவர் அவர்களிடம் சைகைகள் வாயிலாக உரையாடி வந்தார் பேச்சற்றே இருந்தார். அவருடைய திருப்பணிக் காலம் முடிந்ததும் அவர் வீடு திரும்பினார். அதற்குப்பின்பு அவர் மனைவி எலிசபெத்து கருவுற்று ஐந்து மாதமளவும் பிறர் கண்ணில் படாதிருந்தார். ”மக்களுக்குள் எனக்கிருந்த இகழ்ச்சியை நீக்க ஆண்டவர் என்மீது அருள்கூர்ந்து இந்நாளில் இவ்வாறு செய்தருளினார்” என்று தமக்குள் சொல்லிக்கொண்டார்.

**தியானம்:** இன்றைய இறைவார்த்தைப் பகுதிகள் ஆண்டவரால் முடியாத காரியம் ஒன்றுமில்லை. அவரே எம்மைப் படைத்து யாவற்றையம் செய்து முடிப்பவர். கலக்கங்கள், குழப்பங்கள் மத்தியில் அவரே எங்கள் கூட இருந்து செயல்படுபவர் என்பதை தெளிவுபடுத்துகின்றது. அன்று சக்கரியாவும், எலிசபேத்தும் முதிர்ந்த வயதாகியும் குழந்தைகள் இல்லாது வாழ்ந்தபோது ஆண்டவரின் சித்தத்தின்படி எலிசபேத் கருவுற்றாள். ஆண்டவரின் தூதர் சக்கரியாவிற்கு தெரிவித்தபோது அவர் அதை நம்பவில்லை, ஏற்கத் தயங்கினார். அதன் நிமித்தம் குறித்தகாலம் வரும் வரை பேச்சற்றவராய் இருந்தார். தாயின் கருவயிற்றில் உருவாகும் முன்பே யோவானை கிறிஸ்தவின் பிறப்பை அறிவிக்க இறைவன் தெரிந்தெடுத்துள்ளார். இன்று இறைவன் எங்களையும் ஏதோவொரு காரியத்திற்காக பயன்படுத்த தெரிந்தெடுத்திருக்கின்றார். இதை நாங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். ஆனால் நாங்கள் இதை உணர்ந்து கொள்வதுமில்லை, ஏற்றுக்கொள்ள தயாராகவும் இல்லை, இறைவனில் நம்பிக்கை கொண்டு வாழ்வதுமில்லை. எங்கள் மத்தியில் குழந்தைப் பாக்கியம் இல்லாத சகோதரிகளைப் பாத்து எள்ளி நகையாடுகின்றோம், “மலடி” என்று பட்டத்தை அவர்களுக்கு சூட்டி அவமானப்படுத்துகின்றோம். ஆனால், திருமணமாகாத பெண்கள், பாலூட்டாத கொங்கைகள், குழந்தைச் செல்வம் இல்லாதவர்கள் யாவரும் பேறுபெற்றவர்கள் என்று திருப்பாடலில் பார்க்கின்றோம். எனவே இறைவனில் விசுவாங் கொண்டவர்களாக சக்கரியாவும். எலிசபேத்தும் இறைவனுக்கு பணிபுரிந்து வாழ்ந்தார்களோ அதேபோன்று நாங்களும் அவர் அழைப்பை ஏற்று பணிபுரிந்து வாழும்போது நினையாததும் அறியாததுமான காரியங்களை எமக்கும் செய்து எங்களை அவர் வழிநடத்தவார்.